# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.NO. 23 /2020 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | பி.சா- (DW-3) |
| பெயர் | :- | G. ராமலிங்கம் |
| தேதி | :- | 01-09-2026 |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

நான் கருமாப்புரம் ஊரில் வசிக்கிறேன். வசிப்பிடத்திற்கான ஆதாரம் எதையும் நான் தாக்கல்செய்யவில்லை. இந்த வழக்கை ராமசாமியின் மகள்கள் சொத்துக் கேட்டுத் தொடுத்துள்ளனர். உண்ணாமலை, அலமேலு ஆகியோர்மீது தொடுத்துள்ளனர்.

வழக்கு சொத்தின் புல எண் விவரம் எனக்கு தெரியாது. அலமேலுவின் கணவர் வீடு சிங்கிபுரத்தில் உள்ளது. அங்கு அவர்களுக்கு நிலம் உள்ளது என்றால் சரிதான். அலமேலுவின் கணவர் உயிருடன் உள்ளார். சிங்கிபுரத்தில்தான் உள்ளார். அலமேலுவும், அவருடைய கணவரும் பிள்ளைகளுடன் சிங்கிபுரத்தில் உள்ளனர் என்றால் இல்லை.

லட்சுமணன் அவருடைய பேத்திகள் பெயரில் அறுதியாவணங்கள் எப்போது எழுதினார் என்றால் சுமார் 30 ஆண்டுகள் இருக்கும். ராமசாமியை எனக்கு தெரியும். அந்த நிலத்தை அவர் தான் பராமரிக்கிறார் என்றால் இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

அலமேலு வகையறாவினர் என்னிடம் எதாவது புகார் சொன்னார்களா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சியரிடம் புகார் கொடுத்தது எனக்கு தெரியாது. ராமசாமி தான் அவரது மகள்களுக்காக சொத்தை பராமரிக்கிறார் என்றும் நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi, B.L.,
Additional District&Session Judge,
Salem.